# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1991/41 - 2016 නොවැම්බර් මස 02 වැනි බදාදා - 2016.11.02

*1991/41 ஆம் இலக்கம் - 2016 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 02 ஆந் திகதி புதன்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி IV (அ) - மாகாண சபைகள்

### மாகாண சபை அறிவித்தல்கள்

**வடக்கு மாகாண மாகாண சபை**

*2016 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க, வடக்கு மாகாண பாலகர் பகற் கவனிப்பு நிலைய நியதிச் சட்டம்*

*வடக்கு மாகாண மாகாண சபையால் 2016 ஆம் ஆண்டு யூலை மாதம் 21 ஆந் திகதி அங்கீகரிக்கப்பட்ட 2016 ஆம் ஆண்டின் 03 ஆம் இலக்க பாலகர் பகற் கவனிப்பு நிலைய நியதிச் சட்டத்திற்கு வடக்கு மாகாண கௌரவ ஆளுநர் அவர்களால் 2016 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 28 ஆந் திகதி சம்மதம் வழங்கப்பட்டுள்ளது என்பது இத்தால் அறியத்தரப்படுகின்றது.*

க. தெய்வேந்திரம்,<br>
செயலாளர்,<br>
பேரவைச் செயலகம்,<br>
வடக்கு மாகாண மாகாண சபை.

பேரவைச் செயலகம்,<br>
ஏ 9 வீதி, கைதடி,<br>
2016, ஒற்றோபர் 28.

பாலகர் பகற் கவனிப்பு நிலையமொன்றின் ஒழுங்குபடுத்துதல், மேற்பார்வை மற்றும் கண்காணிப்பு அத்துடன் அதனோடு தொடர்புபட்ட அதன் இடைநேர்விளைவான கருமங்களுக்கும் ஏற்பாடு செய்வதற்குமானதொரு நியதிச் சட்டம்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வடக்கு மாகாண மாகாண சபையினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :-

சுருக்கப் பெயரும் நடைமுறைக்கு வரும் திகதியும்.

1. இந்நியதிச் சட்டமானது வடக்கு மாகாண மாகாண சபையின் 2016 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க, பாலகர் பகற் கவனிப்பு நிலைய நியதிச் சட்டம் என எடுத்துக்காட்டப்படலாமென்பதுடன், வட மாகாண ஆளுநர் அதற்கான தனது சம்மதத்தைத் தரக்கூடியவாறான அத்தகைய திகதியன்று நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.

பாகம் I

**பாலகர் பகற் கவனிப்பு நிலையமொன்றின் குறிக்கோளும் உரிமமளித்தலும்**

நியதிச் சட்டத்தின் குறிக்கோள்.

2. இந்நியதிச் சட்டத்தின் குறிக்கோளானது பாலகர் பகற் கவனிப்பு நிலையமொன்றிற்கு சமுகமளிக்கின்ற பாலகரின் பாதுகாப்பு, ஆரோக்கியம் மற்றும் நல்வாழ்வை உறுதிப்படுத்துதலாதல் வேண்டும்.

உரிமம்.

3. ஆளெவரும், (இதனகத்துப்பின்னர் ''மாகாண ஆணையாளர்'' எனக்குறிப்பீடு செய்யப்படும்) நன்னடத்தைப் பாதுகாவல் மற்றும் சிறுவர் கவனிப்புச் சேவைகள் மாகாண ஆணையாளரினால் அது சார்பில் வழங்கப்பட்ட உரிமமொன்றின் அதிகாரத்தின் கீழன்றி, பாலகர் பகற் கவனிப்பு நிலையமொன்றை தாபித்தலோ அல்லது தொழிற்படுத்துதலோ ஆகாது.

உரிமத்திற்கான விண்ணப்பம்.

4. (1) மூன்றாம் பிரிவின் கீழான உரிமமொன்றிற்கான விண்ணப்பம் ஒவ்வொன்றும் விதித்துரைக்கப்பட்ட படிவமொன்றில் மாகாண ஆணையாளருக்கு செய்யப்படுதல் வேண்டுமென்பதுடன் விதித்துரைக்கப்பட்ட கட்டணத்துடன் சேர்த்தனுப்பப்படுதலும் வேண்டும். மாகாண ஆணையாளர், அவசியமானவிடத்து, பாலகர் பகற் கவனிப்புச் சேவையின் பணியாட்டொகுதியின் எவரேனும் உறுப்பினர் தொடர்பில் குற்றப் பதிவேட்டு பரிசோதனைக்கு உட்பட மேலும் தகவலைக் கொடுத்துதவுமாறு விண்ணப்பகாரரொருவரைத்தேவைப்படுத்தலாம்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழ் சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப்பம் ஒவ்வொன்றும் தேவைப்படுத்தப்பட்ட எல்லா விபரங்களினதும் பூர்த்தியானதும் சரியானதுமான தகவலைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(3) பொய்யான, தவறாக இட்டுச் செல்லுகின்ற அல்லது சரியற்ற தகவல் அல்லது விபரங்களை கொண்டுள்ளதாகக் கண்டுபிடிக்கப்பட்ட விண்ணப்பமொன்று நிராகரிக்கப்படுதல் வேண்டும்.

பரிசோதனை.

5. நான்காம் பிரிவின் கீழ் விண்ணப்பமொன்று பெற்றுக்கொண்டதன் மேல், மாகாண ஆணையாளர் விண்ணப்பம் தொடர்புபடுகின்ற பாலகர் பகற் கவனிப்பு நிலையத்தின் பரிசோதனையை நிறைவேற்றுவதற்கு நன்னடத்தைப் பாதுகாவல் மற்றும் சிறுவர் கவனிப்புச் சேவைகள் திணைக்களத்தின் எவரேனும் அலுவலருக்கு அதிகாரமளித்தல் வேண்டும்.

அறிக்கை.

6. ஐந்தாம் பிரிவின்கீழ் அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர், அவரது பரிசோதனை பூர்த்தி செய்யப்பட்டதன் மேல், குறித்துரைக்கப்பட்ட பாலகர் பகற் கவனிப்பு நிலையத்தில் அவரால் நிறைவேற்றப்பட்ட பரிசோதனையின் மீதான எல்லா இயைபான விபரங்களையும் தருகின்ற அறிக்கையொன்றை மாகாண ஆணையாளருக்கு சமர்ப்பித்தல் வேண்டும். அவ்வாள் பாலகர் கவனிப்புச் சேவையை வழங்குவதற்கு அதன் ஏற்பாட்டில் ஈடுபடுவதற்கு அல்லது பாலகர்களுடன் ஒன்றிணைவதற்கு பொருத்தமானதும் முறையானதுமான ஆளொருவராக உள்ளாரா என்பதை அறிக்கை உள்ளடக்குதல் வேண்டும்.

உரிமம் வழங்குதல்.

7. ஆறாம் பிரிவின்கீழான அறிக்கை கிடைக்கப்பெற்றதன்மேல், மாகாண ஆணையாளர் அறிக்கையில் உள்ளடங்கியுள்ள விடயங்கள் மற்றும் எவையேனும் விதப்புரை இருப்பின், அவற்றையும் கருத்திற்கொண்டதன் மேல், ஒன்றில் பாலகர் பகற் கவனிப்பு நிலையத்தின் தாபிப்புக்கென உரிமமொன்றை வழங்குதல் வேண்டும் அல்லது அவரால் பதிவு செய்யப்பட்ட காரணங்களுக்கென உரிமமொன்றை வழங்க மறுத்தல் வேண்டும்.

உரிமத்தின் வடிவமும் காலப்பகுதியும்.

8. ஏழாம் பிரிவின் கீழ் வழங்கப்பட்ட உரிமமொன்று :-

(அ) மாகாண ஆணையாளர் தீர்மானிக்கக்கூடியவாறான அத்தகைய படிவத்தில் இருத்தல் வேண்டும் ;

(ஆ) உரிமத்தில் குறித்துரைக்கப்பட்டவாறான அத்தகைய நியதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கு அமைவானதாக இருத்தல் வேண்டும்;

(இ) உரிமத்தில் குறித்துரைக்கப்பட வேண்டியவாறான அத்தகைய திகதியிலிருந்து தொழிற்பாட்டிற்கு வருதல் வேண்டும் ; அத்துடன்

(ஈ) முன்னதாக கைமீட்கப்பட்டாலொழிய , உரிமத்தில் குறித்துரைக்கப்பட்டவாறான காலப்பகுதிக்கு வலுவிலிருத்தலும் வேண்டும்.

*9.* ஏழாம் பிரிவின் வழங்கப்பட்ட உரிமமொன்று, முன்னதாக வழங்கப்பட்ட உரிமத்தின் காலாவதி திகதிக்கு முன்பதாக முப்பது நாட்களுக்குக் குறையாமல் மாகாண ஆணையாளருக்கு விதித்துரைக்கப்பட்ட புதுப்பித்தல் கட்டணத்துடன் சேர்த்தனுப்பப்படும் விதித்துரைக்கப்பட்ட படிவத்தில் அந்நோக்கத்திற்கென சமர்ப்பிக்கப்பட்டுள்ள விண்ணப்பமொன்றின் மேல் புதுப்பிக்கப்படலாம். உரிமமொன்றைப் புதுப்பித்தல்

(2) மாகாண ஆணையாளர் :-

(அ) உரிமம் பெற்றவர் வழங்கப்பட்ட உரிமத்தின் நியதிகள் மற்றும் நிபந்தனைகளை மீறியிருக்காதவிடத்து அல்லது முரணாக எதனையும் செய்திருக்காதவிடத்து;

(ஆ) உரிமம் பெற்றவர் இந்நியதிச்சட்டத்தின் ஏதேனும் ஏற்பாடுகளை அல்லது அதன் கீழ் ஆக்கப்பட்ட அல்லது வழங்கப்பட்ட ஏதேனும் ஒழுங்குவிதி அல்லது வழிகாட்டிநெறிகளை மீறியிருக்காதவிடத்து; அல்லது

(இ) சிறுவர் தொடர்பான ஏதேனும் எழுத்திலான சட்டத்தின் ஏற்பாடுகளை மீறியிருக்காதவிடத்து,

(1) ஆம் உட்பிரிவின் கீழ் விண்ணப்பமொன்றைப் பெற்றுக்கொண்டதன் மேல் உரிமமொன்றைப் புதுப்பிக்கலாம்.

*10.* (1) ஏழாம் ஆம் பிரிவின் கீழ் வழங்கப்பட்ட உரிமமொன்று:- உரிமமொன்றை இடைநிறுத்திவைத்தல் அல்லது இரத்துச் செய்தல்.

(அ) அவ்வுரிமம் பொய்யான, தவறாக இட்டுச் செல்கின்ற அல்லது சரியற்ற தகவலை வழங்குவதன் மூலம் பெறப்பட்டுள்ளதெனக் கண்டுபிடிக்கப்படின்;

(ஆ) பாலகர் பகற் கவனிப்பு நிலையத்திற்குப் பொறுப்பான ஆள் இந்நியதிச் சட்டத்தின் ஏற்பாடுகளை அல்லது அதன் கீழ் ஆக்கப்பட்ட அல்லது வழங்கப்பட்ட ஒழுங்குவிதிகளை அல்லது வழிகாட்டிநெறிகளை மீறியிருப்பின் ;

(இ) பாலகரொருவரின் அதிசிறந்த நலனுக்கு அவசியமாக இருப்பின் ;

(ஈ) பாலகர் பகற் கவனிப்பு நிலையம் பாலகரின் பாதுகாப்பிற்கு ஆபத்தாக இருந்திருப்பின் ; அல்லது

(உ) பாலகர் பகற் கவனிப்பு நிலையமானது வேண்டுமென்று வழிகாட்டி நெறிகளுடன் இணங்கியொழுகத் தவறியிருப்பின்,

மாகாண ஆணையாளரால் இடைநிறுத்தப்படலாம் அல்லது இரத்துச் செய்யப்படலாம்.

(2) வழங்கப்பட்ட உரிமமொன்று விடயத்துக்கேற்ப இப்பிரிவின் கீழ் இடைநிறுத்தப்படுமிடத்து அல்லது இரத்துச் செய்யப்படுமிடத்து, உரிமம் பெற்றவரால் தரப்பட்ட முகவரிக்கு பதிவுத் தபாலில் எழுத்திலான அறிவித்தலொன்று மூலம் அத்தகைய இடைநிறுத்தம் அல்லது இரத்துச் செய்தல் பற்றி உரிமம் பெற்றவருக்கு உடனடுத்து அறிவிப்பது மாகாண ஆணையாளரின் கடமையாதல் வேண்டும்.

*11.* விடயத்துக்கேற்ப, 7 ஆம் பிரிவின் கீழ் அல்லது 9 ஆம் பிரிவின்கீழ் உரிமமொன்றின் வழங்குகை அல்லதுபுதுப்பிதலுக்கான விண்ணப்பமொன்று மறுக்கப்படுமிடத்து, அத்தகைய மறுப்புக்கான காரணங்கள் மாகாண ஆணையாளரால் பதிவு செய்யப்படுதல் வேண்டும். அத்தகைய மறுப்புக்கான காரணம் பற்றி விண்ணப்பத்தில் காணப்படுகின்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் எழுத்திலான அறிவித்தல் மூலம் அத்தகைய விண்ணப்பத்தைச் செய்கின்ற ஆளுக்கு அறிவிப்பது மாகாண ஆணையாளரின் கடமையாதல் வேண்டும். காரணம் அறிவிக்கப்படுதல் வேண்டும்.

*12.* உரிம மொன்றின் வழங்கல் அல்லது புதுப்பித்தலை மறுக்கின்ற அல்லது வழங்கப்பட்ட உரிமமொன்றின் இடைநிறுத்தல் அல்லது இரத்துச் செய்தல் தீர்மானமொன்றினால் இடருகின்ற எவரேனுமாள் விடயத்துக்கேற்ப, மறுப்பு அல்லது இடைநிறுத்தல் அல்லது இரத்துச் செய்தல் பற்றி அத்தகைய ஆளுக்கு அறிவிக்கின்ற எழுத்திலான அறிவித்தலை பெற்றுக் கொண்ட திகதியிலிருந்து முப்பது நாட்களுக்குள் அமைச்சரால் பெயர் குறித்து நியமிக்கப்படும் முறையே சுகாதார அமைச்சு மற்றும் கல்வி அமைச்சின் இரண்டு அலுவலர்களையும் அத்துடன் சட்டத்தரணியாக மேன்முறையீடுகள்.

இருக்க வேண்டிய ஆளொருவரையும் கொண்டமைந்த குழுவொன்றுக்கு அத்தகைய தீர்மானத்திற்கெதிராக மேன்முறையீடு செய்யலாம்.

(2) ஓராம் உட்பிரிவின் கீழ் சமர்ப்பிக்கப்பட்ட ஏதேனும் மேன்முறையீடு மீதான தீர்மானம் அத்தகைய மேன்முறையீட்டை பெற்றுக்கொண்டதிலிருந்து அறுபது நாட்களுள் எடுக்கப்படுதல் வேண்டுமென்பதுடன், அத்தகைய மேன்முறையீட்டைச் செய்கின்ற ஆளுக்கு உடனடியாக அதன்மீது எடுக்கப்பட்ட தீர்மானம் பற்றி அறிவிக்கப்படுதலும் வேண்டும்.

(3) குழுவானது, அது தோதானதெனக் கருதுமிடத்து, குழு (1) ஆம் உட்பிரிவின் கீழ் அதற்குச் செய்யப்பட்ட ஏதேனும் மேன்முறையீடு மீதான ஏதேனும் முடிபை எடுப்பதற்கு அத்தகைய விசாரணையை நடாத்தலாம்.

(4) இப்பிரிவின் கீழ் செய்யப்பட்ட ஏதேனும் மேன்முறையீடு மீதான குழுவின் முடிவு இறுதியானதாதல் வேண்டும்.

உரிமம் கைமாற்றத்தகாதது.

13. உரிமமொன்று எவரேனும் ஆளுக்கு உரிமம் பெற்றவரினால் கைமாற்றப்படுதலாகாது.

உரிமம் பெற்றவரின் கடமை.

14. (1) மேற்பார்வை செய்கின்ற அலுவலர் அல்லது முகாமைத்துவ அலுவலர் ஆகியோரின் மாற்றம் உட்பட பாலகர் கவனிப்புச் சேவையொன்றின் ஏற்பாடுகளுடன் தொடர்புபடுகின்ற அல்லது அதனைப் பாதிக்கின்ற சூழ்நிலைகளின் மாற்றங்கள் பற்றி மட்டுப்பாடின்றி மாகாண ஆணையாளருக்கு அறிவிப்பதுஉரிமம் பெற்றவரின் கடமையாதல் வேண்டும்.

(3) பாலகர் கவனிப்புச் சேவையின் பணியாட்டொகுதியினரின் உறுப்பினர் ஒவ்வொருவரும் காலத்திற்குக் காலம் மருத்துவ பரிசோதனைக்கு உட்படுதல் வேண்டும்.

பாகம் II

**பாலகர் பகற் கவனிப்புச் சேவைகள்**

பொதுவான கோட்பாடுகள்.

15. பாலகர் பகற் கவனிப்புச் சேவைகள் பின்வரும் கோட்பாடுகளின் கீழ் நடாத்தப்படுதல் வேண்டும் :-

(அ) பாலகரொருவரின் அதிசிறந்த நலன்கள் அதிமுக்கிய விவகாரமாகும் ;

(ஆ) பாலகர் கவனிப்புச் சேவைகள் :-
(i) பாலகரைப் பாதுகாக்கின்றதும் ;
(ii) பாலகரின் கௌரவம் மற்றும் தனித்தன்மையை மதிக்கின்றதும் ;
(iii) பாலகரின் ஆரோக்கியம் மற்றும் நல்வாழ்வை மேம்படுத்துகின்றதும் ; அத்துடன்
(iv) பாலகருக்கு சாதகமான அனுபவத்தை வழங்குகின்றதுமான,
வழியொன்றில் பாலகருக்கு வழங்கப்படுதல் வேண்டும்.

(இ) பாலகர் பகற் கவனிப்புச் சேவைகள் சிறுவரின் உருவாக்கத்திறனுள்ள, மனஎழுச்சியுள்ள, புலமைமிக்க, மொழித்திறமையுள்ள பௌதீக ரீதியான, பொழுதுபோக்குள்ள மற்றும் சமூக சாத்தியத்தை ஊக்கமூட்டுகின்றதும் அபிவிருத்தி செய்கின்றதுமான வழியொன்றில் வழங்கப்படுதல் வேண்டும்.

(ஈ) பெற்றோர்கள் பாலகரின் வளர்ப்பு, பாதுகாப்பு மற்றும் அபிவிருத்திக்கான முதன்மைப் பொறுப்பைக் கொண்டிருத்தல் வேண்டுமென்பதுடன் அப்பங்கில் உதவியளித்தலும் வேண்டும் ;

(உ) பாலகர் பகற் கவனிப்புச் சேவைகள் ஆனவை -

(i) பெற்றோர்கள் மற்றும் சமூகத்தின் வேறு உறுப்பினர்கள் ஈடுபடுகின்ற ; அத்துடன்
(ii) சமூகத்தின் பல கலாசார மற்றும் பன்மொழிசார் தன்மையை வெளிப்படுத்துகின்ற,
வழியொன்றில் திட்டமிடப்படுதலும் ஏற்பாடு செய்யப்படுதலும் வேண்டும்.

பாலகர் பகற் கவனிப்பு நிலையத்தின் பரிசோதிப்பும் கண்காணிப்பும்.

16. (1) இந்நியதிச் சட்டத்தின் ஏற்பாடுகள், ஒழுங்குவிதிகள் மற்றும் வழிகாட்டி நெறிகளுடன் இணங்கியொழுகுவதை உறுதிப்படுத்தும் நோக்கத்திற்கென மாகாண ஆணையாளர் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர் பின்வருவனவற்றுக்கு தத்துவமுடையவராதல் வேண்டும்.

(அ) ஏதேனும் நியாயமான நேரத்தில் பாலகர் பகற் கவனிப்புச் சேவை முனைவு செய்யப்படுகின்ற அல்லது ஏற்பாடு செய்யயப்படுகின்ற ஏதேனும் வளவுகளினுள் உள்நுழைதலும் பாலகர் பகற் கவனிப்புச் சேவையின் ஏற்பாட்டைக் கவனித்தலும் ;

(ஆ) பாலகர் பகற் கவனிப்பு நிலையத்தின் தொழிற்பாட்டிற்கு இயைபான ஏதேனும் பதிவேடுகள் அல்லது வேறு ஆவணங்களின் முன்வைத்தலைத் தேவைப்படுத்தும் அவற்றைப் பரீட்சிக்கும் மற்றும் பிரதிகளை எடுக்கும் நோக்கத்திற்கென தற்காலிகமாக அவற்றை அகற்றுதல் ;

(இ) பாலகர் பகற் கவனிப்பு நிலையத்தின் ஏதேனும் பாகத்தை அல்லது பாலகர் பகற் கவனிப்பு நிலையத்தின் எவற்றையும் அளத்தல், சோதனை செய்தல், புகைப்படமெடுத்தல் அல்லது படமெடுத்தல்;

(ஈ) பகுப்பாய்வுக்காக அல்லது பரீட்சிப்புக்காக பாலகர் பகற் கவனிப்பு நிலையத்திலிருந்து எதனையும் அல்லது எதனதும் அல்லது எதிலிருந்தும் மாதிரியொன்றை எடுத்தல்;

(உ) பாலகர் பகற் கவனிப்பு நிலையத்தின் சாதனங்கள் மற்றும் வசதிகளை தொழிற்படுத்துதல் அல்லது அவ்வாறு செய்வதற்கு பாலகர் பகற் கவனிப்பு நிலையத்தில் ஆளொருவரைப் பணித்தல்;

(ஊ) இந்நியதிச் சட்டத்தின் மீறுகையொன்றின் சான்றாக உள்ள அல்லது உறுதிப்படுத்தக்கூடிய எவற்றையும் கைப்பற்றுதல் ; அத்துடன்

(எ) பாலகர் பகற் கவனிப்பு நிலையத்தின் இடம்கொண்டிருப்பவர் அல்லது அவ்வேளையில் அங்கிருப்பவர் இணங்கியொழுகுதல் நோக்கங்களுக்கென நியாயமாக அலுவலர் தேவைப்படுத்துகின்றவாறாக அத்தகைய உதவியை அலுவலருக்கு கொடுப்பதற்கு பாலகர் பகற் கவனிப்பு நிலையத்திலுள்ள அத்தகைய ஆளைப் பணித்தல்.

(2) மாகாண ஆணையாளர் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர் (1) (ஆ) என்னும் உட்பிரிவின் பயனாக ஏதேனும் பதிவேடுகள் அல்லது வேறு ஆவணங்களை அகற்றுமிடத்து, மாகாண ஆணையாளர் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர் –

(அ) அத்தகைய பொருட்கள் எவ்வாளிடமிருந்து எடுக்கப்பட்டதோ அவ்வாளுக்கு பற்றுச்சீட்டை கொடுத்தல் வேண்டும் ; அத்துடன்

(ஆ) அப்பொருட்கள் எந்நோக்கத்திற்கு எடுக்கப்பட்டதோ அந்நோக்கம் அடையப்பட்டதன் பின்னர் உரிமம் வைத்திருப்பவருக்கு அப்பொருட்களை மீள வழங்குதல் வேண்டும்.

(3) மாகாண ஆணையாளர், (1) ஆம் உட்பிரிவின் கீழான பரிசோதனை மற்றும் கண்காணிப்பொன்றைத் தொடர்ந்து பரிசோதனை மற்றும் கண்காணிப்பின் பெறுபேறுகளின் அறிக்கையொன்றை உரிமம் வைத்திருப்பவருக்கு வழங்குதல் வேண்டும்.

(4) ஏதேனும் வளவுகளினுள் உள்நுழைய மாகாண ஆணையாளரை அல்லது அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரை அனுமதிக்க மறுக்கின்ற அல்லது தவறுகின்ற எவரேனுமாள் தவறைப் புரிந்தவராதல் வேண்டும்.

பாகம் III

**பொதுவானவை**

தத்துவங்கள், பணிகள் மற்றும் கடமைகளின் கையளிப்பு.

17. (1) மாகாண ஆணையாளர், அவர் கருதக்கூடியவாறான அத்தகைய நிபந்தனைகளுக்கமைவாக அத்தகைய அவரது தத்துவங்கள், பணிகள் மற்றும் கடமைகளை அலுவலரொருவருக்கு கையளிக்கலாமென்பதுடன் அத்தகைய அலுவலர் அவருக்கு குறித்தளிக்கப்பட்டவாறாக அத்தகைய தத்துவங்கள், பணிகள் மற்றும் கடமைகளைப் பிரயோகிக்கலாம்,புரியலாம் அத்துடன் நிறைவேற்றலாம்.

(2) மாகாண ஆணையாளர், அவருக்கு அவ்வாறு செய்வது தோதானதெனக் கருதும் போதிலெல்லாம் அலுவலரொருவருக்கு கையளிக்கப்பட்ட அனைத்து அல்லது ஏதேனும் தத்துவங்கள், பணிகள் மற்றும் கடமைகளைப் பிரயோகிக்கலாம் , புரியலாம் அத்துடன் நிறைவேற்றலாம்.

நியதிச்சட்டத்திற்கு முரணாக பாலகர்

18. (1) பாலகர் பகற் கவனிப்பு நிலையத்திற்கான உரிமமொன்றைப் பெறாமல் அத்தகைய நிலையமொன்றை தாபிக்கின்ற அல்லது உரிமமொன்றை இரத்துச் செய்த பின்னர் பாலகர் பகற் கவனிப்பு நிலையமொன்றைத் தொடர்ந்து நடத்துகின்ற ;

பகற் கவனிப்பு நிலையத்தினைத் தாபித்தல் அல்லது பேணுதல் தவறொன்றாதல்.

(2) இந்நியதிச் சட்டத்தின் கீழ் உரிமம் வலிதாகும் காலப்பகுதி காலாவதியான பின்னர் பாலகர் பகற் கவனிப்பு நிலையமொன்றைப் பேணுகின்ற அல்லது நிர்வகிக்கின்ற ;

(3) அதனது உரிமத்தை இரத்துச் செய்த பின்னர் பாலகர் பகற் கவனிப்பு நிலையமொன்றாகச் செயற்படுவதைத் தொடருகின்ற,

எவரேனுமாள், அல்லது ஆட்கள் குழு இந்நியதிச்சட்டத்தின் கீழ் தவறொன்றிற்குக் குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன், நீதிவானொருவர் முன்னரான சுருக்கமுறையான விளக்கத்தின் பின்னர் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன் மேல்,

(அ) அத்தகைய தவறு முதலாவது தடவையாகப் புரியப்படுகின்றவிடத்து, இருபத்தையாயிரம் ரூபாவுக்கு விஞ்சாத குற்றப்பணமொன்றிற்கு அல்லது ஆறு மாத காலப்பகுதியொன்றை விஞ்சாத இருவகையிலொரு வகையான மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம், மறியற்றண்டனை ஆகிய இரண்டிற்கும் ; அல்லது

(ஆ) அத்தகைய தவறு இரண்டாவது தடவையாக அல்லது அதற்குப் பின்னர் புரியப்படுகின்றவிடத்து, ஐம்பதினாயிரம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு அல்லது இரண்டாண்டு காலப்பகுதியொன்றை விஞ்சாத இருவகையிலொரு வகையான மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம், மறியற்றண்டனை ஆகிய இரண்டிற்கும் ; ஆளாதல் வேண்டும்.

தகவல்களை வழங்கத் தவறுதல் ஏதேனும் பொய்யான கூற்றை ஆக்குதல் தவறொன்றாதல்.

19. (1) இந்நியதிச் சட்டத்தின் கீழ் சமர்ப்பிக்கப்படுவதற்குத் தேவைப்படுத்தப்படும் ஏதேனும் தகவல் அல்லது பதிவேட்டைச் சமர்ப்பிப்பதற்குத் தவறுகின்ற அல்லது மறுக்கின்ற எவரேனுமாள் இந்நியதிச்சட்டத்தின் கீழ் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன், நீதிவானொருவர் முன்னரான சுருக்கமுறை விளக்கத்தின் பின்னர் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன் மேல்,

(அ) அத்தகைய தவறு முதலாவதுதடவையாகப் புரியப்படுகின்றவிடத்து, இருபத்தையாயிரம் ரூபாவுக்கு விஞ்சாத குற்றப்பணமொன்றிற்கு ; அல்லது

(ஆ) அத்தகைய தவறு இரண்டாவது தடவையாக அல்லது அதற்குப் பின்னர் புரியப்படுகின்றவிடத்து, ஐம்பதினாயிரம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு அல்லது ஆறு மாத காலப்பகுதியொன்றை விஞ்சாத இருவகையிலொரு வகையான மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம், மறியற்றண்டனை ஆகிய இரண்டிற்கும் ;

ஆளாதல் வேண்டும்.

(2) பொய்யான தகவலை அறிந்து கொண்டே சமர்ப்பிக்கின்ற அல்லது இந்நியதிச் சட்டத்தின் கீழ் செய்யப்பட்ட ஏதேனும் பதிவேட்டில் அல்லது விண்ணப்பத்தில் ஏதேனும் பொய்யான அல்லது செம்மையற்ற கூற்றை அறிந்துகொண்டே ஆக்குகின்ற எவரேனுமாள் இந்நியதிச்சட்டத்தின் கீழ் தவறொன்றிற்குக் குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன், நீதிவானொருவர் முன்னரான சுருக்கமுறையான விளக்கத்தின் பின்னர் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன் மேல்,

(அ) அத்தகைய தவறு முதலாவது தடவையாகப் புரியப்படுகின்றவிடத்து, இருபத்தையாயிரம் ரூபாவுக்கு விஞ்சாத குற்றப்பணமொன்றிற்கு ; அல்லது

(ஆ) அத்தகைய தவறு இரண்டாவது தடவையாக அல்லது அதற்குப் பின்னர் புரியப்படுகின்றவிடத்து, ஐம்பதினாயிரம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு அல்லது ஆறு மாத காலப்பகுதியொன்றை விஞ்சாத இருவகையிலொரு வகையான மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம், மறியற்றண்டனை ஆகிய இரண்டிற்கும்

ஆளாதல் வேண்டும்.

பொதுவான தண்டம்.

20. இந்நியதிச் சட்டத்தின் விசேட ஏற்பாடுகள் இல்லாதவிடத்து அதன்கீழ் ஆக்கப்பட்ட ஏதேனும் ஒழுங்குவிதிகள் அல்லது வழங்கப்பட்ட வழிகாட்டி நெறிகளுக்கு முரணாகச் செயலாற்றகின்ற எவரேனுமாள் இந்நியதிச்சட்டத்தின் கீழான தவறொன்றிற்குக் குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன், நீதிவான்முன்னரான சுருக்கமுறையான விளக்கத்தின் பின்னர் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல் பத்தாயிரம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு அல்லது மூன்று மாத காலப்பகுதியொன்றை விஞ்சாத இருவகையிலொருவகையான மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம் மற்றும் மறியற்றண்டனை ஆகிய இரண்டிற்கும்ஆளாதலும் வேண்டும்.

21. (1) அமைச்சரானவர், இந்நியதிச் சட்டத்தின் ஏற்பாடுகளை நிறைவேற்றும் நோக்கத்திற்காக அல்லது பயன்கொடுக்கும் நோக்கத்திற்காக ஒழுங்குவிதிகளை ஆக்கலாம். ஒழுங்கு விதிகள்.

(2) ஓராம் உட்பிரிவினால் அளிக்கப்பட்ட தத்துவங்களின் பொதுமைக்குப் பங்கமின்றி பின்வரும் கருமங்கள் எல்லாவற்றிற்காக அல்லது அவற்றின் ஏதேனுமொன்றிற்கென ஒழுங்குவிதிகளை ஆக்கலாம் :-

(அ) எவ்விடயம் தொடர்பில் இந்நியதிச்சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் ஆக்கப்பட வேண்டுமென விதித்துரைக்கப்படுகின்றதோ அல்லது அதிகாரமளிக்கப்படுகின்றதோ அவ்வெல்லா விடயங்களும்;

(ஆ) பாலகர் பகற் கவனிப்பு நிலையத்திற்கு பாலகரொருவரை அனுமதிப்பதற்கான கட்டளைக்கற்கள் ;

(இ) பாலகர் பகற் கவனிப்புச் சேவையின் வகைகளை விதித்துரைத்தலும் அத்தகைய வகைகள் ஒவ்வொன்றிற்குமென அல்லது ஒவ்வொன்று தொடர்பிலும் வேறுபட்ட ஏற்பாடுகளை ஆக்குதல் ;

(ஈ) குறித்த ஆளொருவர், தேவைப்படுத்துகின்றவாறாக பாலகர் பகற் கவனிப்புச் சேவையொன்றின் ஏற்பாட்டினை வழங்குவதற்கு அல்லது ஈடுபடுவதற்கு அல்லது பாலகருடன் ஒன்றிணைவதற்கு பொருத்தமானதும் சரியானதுமான ஆளொருவராக உள்ளாரா எனத் தீர்மானிப்பதில் விதித்துரைக்கின்ற விடயங்கள் ;

(உ) குற்றப் பதிவேட்டு சோதனைகள் உட்பட ஆவணங்களையும் அத்துடன் இந்நியதிச் சட்டத்தின் கீழான விண்ணப்பமொன்று தொடர்பில் ஆளொருவரினால் வழங்கப்பட வேண்டிய தகவல்களையும் விதித்துரைத்தல் ;

(ஊ) பாலகர் பகற் கவனிப்புச் சேவைகளின் ஏற்பாட்டிற்கான பணியாட்களின் தேவைப்பாடுகளை ஒழுங்குபடுத்தல்;

(எ) பாலகர் பகற் கவனிப்புச் சேவை வழங்கலின் போது பாலகரின் ஆரோக்கியம் மற்றும் பாதுகாப்பு பற்றிய தேவைப்பாடுகளை விதித்துரைத்தல் ;

(ஏ) பாலகர் பகற் கவனிப்புச் சேவைகளின் ஏற்பாட்டிற்கான கட்டிட மற்றும் வேறு பௌதிக சூழல் தேவைப்பாடுகளை ஒழுங்குபடுத்துதல்;

(ஐ) பாலகர் பகற் கவனிப்புச் சேவைகளில் ஏற்பாடு செய்யப்பட வேண்டிய செயற்பாடுகளின் நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் உபகரணங்களை ஒழுங்குபடுத்துதல் ;

(ஒ) பாலகர் பகற் கவனிப்புச் சேவைகளின் நிருவாகம், பேணப்பட வேண்டிய பதிவேடுகள் மற்றும் தயாரிக்கப்பட வேண்டிய திரட்டுகளை ஒழுங்குபடுத்துதல்;

(ஓ) இந்நியதிச்சட்டத்தின் கீழான கருமங்கள் தொடர்பில் செலுத்தப்படற்பாலதான கட்டணங்களை விதித்துரைத்தல்;

(ஔ) பின்வருவன தொடர்பில் பாலகர் பகற் கவனிப்பு நிலையத்தினால் பேணப்பட வேண்டிய தராதரங்கள் :-

(i) தொழிற்பாட்டுத் திட்டம் ;
(ii) பணியாட்டொகுதியினரின் பயிற்சி ;
(iii) கவனிப்பு, கற்றல் மற்றும் விளையாடுதல் ;
(iv) பாலகரின் பாதுகாப்பு;
(v) பாலகரின் ஆரோக்கியம் ;
(vi) பாலகரின் ஏதேனும் விசேட தேவைகள் மற்றும் இயலாமைகள் ; அத்துடன்
(vii) பணியாட்டொகுதியினரின் நடத்தைகள்.

(க) இந்நியதிச்சட்டத்தின் கீழ் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென தேவைப்படுத்தப்பட்ட ஏதேனும் அறிக்கையில் உள்ளடக்கப்பட வேண்டிய தகவல் ; அத்துடன்

(ங) மாகாண ஆணையாளரினால் வைத்திருக்கப்பட வேண்டியதும் பேணப்பட வேண்டியதுமான புத்தகங்களும் இடாப்புகளும் மற்றும் அதில் பதியப்பட வேண்டிய விபரங்களும்.

(3) அமைச்சரினால் ஆக்கப்படும் எல்லா ஒழுங்குவிதிகளும் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென்பதுடன், அத்தகைய வர்த்தமானியில் வெளியிடுதலிலிருந்து மூன்று மாத காலத்தினுள் வடமாகாண சபைக்கு சமர்ப்பிக்கப்பட்டு அத்தகைய வடமாகாண சபையினால் அங்கீகரிக்கப்படுதலும் வேண்டும்.

(4) வடமாகாண சபையினால் அங்கீகரிக்கப்படாத ஒவ்வொரு ஒழுங்குவிதியும் அத்தகைய அங்கீகாரம் மறுக்கப்பட்ட தேதியிலிருந்து ஆனால் அதன் கீழ் முன்னரே செய்யப்பட்ட எதற்கும் பங்கமின்றி இல்லாதொழிக்கப்பட்டதாகக் கருதப்படுதல் வேண்டும்.

(5) ஏதேனும் ஒழுங்குவிதி எத்தேதியன்று இரத்துச் செய்யப்பட்டதாக கருதப்பட வேண்டுமோ அத்தேதி பற்றிய அறிவித்தல் வர்த்தமானியில் வெளியிடப்படுதல் வேண்டும்.

வழிகாட்டி நெறிகள்.

22. மாகாண ஆணையாளர், வினைத்திறனான தொழிற்பாட்டிற்கென பாலகர் பகற் கவனிப்பு நிலையத்திற்கு வழிகாட்டிநெறிகளை காலத்திற்குக் காலம் வழங்கலாம்.

பேணல்கள்.

23. (1) இந்நியதிச் சட்டம் நடைமுறைக்கு வரும் தேதியன்று ஏதேனும் எழுத்திலான சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளதும் இந்நியதிச் சட்டம் நடைமுறைக்கு வரும் தேதியன்று செயற்படுத்தப்பட்டு பேணப்பட்டுக் கொண்டிருக்கின்றதுமான ஏதேனும் பாலகர் பகற் கவனிப்பு நிலையம், இந்நியதிச் சட்டத்தின் 2 ஆம் பிரிவில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகள் எது எவ்வாறிருப்பினும், இந்நியதிச் சட்டம் நடைமுறைக்கு வரும் அத்தகைய தேதியிலிருந்தான ஆறு மாத காலப்பகுதியொன்றுக்குத் தொடர்ந்தும் செயற்படுத்தப்பட்டு பேணப்படுவது அனுமதிக்கப்படுதல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட ஆறு மாதங்கள் காலப்பகுதி காலாவதியாக முன்னர், அவ்வுட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட பாலகர் பகற் கவனிப்பு நிலையம் ஒன்று அத்தகைய பாலகர் பகற் கவனிப்பு நிலையத்திற்கான உரிமமொன்றிற்காக இந்நியதிச்சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் விண்ணப்பமொன்றைச் செய்வதற்கு தேவைப்படுத்தப்படுதல் வேண்டும்.

ஒவ்வாமையின் விடயத்தில் தமிழ் உரை மேலோங்கி நிற்றல்.

24. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் தமிழ் உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

பொருள் கோடல்.

இந்நியதிச் சட்டத்தில் சந்தர்ப்பம் வேறு வகையில் தேவைப்படுத்தினாலன்றி –

''பாலகர்'' என்பது ஐந்து வயதிற்கு உட்பட்ட ஆள் எனப் பொருள் படும், எனினும் பாலகர் பகற் கவனிப்பு நிலையத்திற்கான அனுமதிக்கான வயது ஒரு வயதிற்கும் ஐந்து வயதிற்கும் இடைப்பட்டதாக இருத்தல் வேண்டும். அத்துடன்ஒரு வயதிற்குட்பட்ட பாலகரின் விடயத்தில் மாகாண ஆணையாளர் :-

(அ) குழந்தை நல மருத்துவர்;
(ஆ) சிறுவர் நன்னடத்தை உத்தியோகத்தர் ; அத்துடன்
(இ) குடும்ப நல உத்தியோகத்தர்

ஆகியோரைக் கொண்டமைந்த குழுவின் சிபாரிசின் அடிப்படையில் அனுமதி வழங்கப்படலாம்.

'' பாலகர் பகற் கவனிப்புச் சேவை'' என்பது,

(அ) பாலகரின் உறவினர் அல்லது பாதுகாவலரொருவர் தவிர்ந்த வேறு ஆளொருவரினால்;
(ஆ) பாலகரின் வதிவிடம் தவிர்ந்த வேறு இடமொன்றில்; அத்துடன்
(இ) பாலகரின் கல்வி மற்றும் கவனிப்பை ஒழுங்காக வழங்குவதற்கான சேவையொன்றின் போது,

பாலகரொருவருக்கு வழங்கப்படும் கல்வி மற்றும் கவனிப்பு எனப் பொருள்படும்;

''அமைச்சர்'' என்பது, வட மாகாணத்தின் நன்னடத்தைப் பாதுகாவல் மற்றும் சிறுவர் கவனிப்பு சேவைகள் என்னும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சர் எனப் பொருள்படும் ; அத்துடன்

''ஆள்'' என்பது, கூட்டிணைக்கப்பட்ட அல்லது கூட்டிணைக்கப்படாத எவரேனும் ஆட்கள் குழுமத்தையும் உள்ளடக்கும்.

11-852

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.